# அந்நியப் பெண்களை பார்ப்பதினால் ஏற்படும் விபரீதங்களும், அதை விட்டு தவிர்ந்து கொள்ளும் விபரங்களும்

## மற்றும்

# படிப்படியாக இறைநேசராக ஆகுவதின் வழிமுறைகள்

தொகுப்பு :

ஹஜ்ரத் மௌலானா பீர்
துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷபந்தி
முஜத்திதீ தாமத் பரகாதுஹும்

بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் இறைவனுக்கே ! சாந்தியும் சமாதானமும் நல்லடியர்கள் மீது உண்டாகட்டுமாக! இந்த காலம் சாதாரண காலமல்ல. குழப்பங்களால் சூழப்பட்ட காலமிது. இச்சமயம் அதிகமான மக்கள் வெட்கம் அரிதானதின் காரணமாக சிரமபப்படுகிறார்கள். பார்வை தவறான இடங்களில் படுவது தீய பார்வையாகும். இது ஒவ்வொரு மணியின் மாறாக ஒவ்வொரு நொடியின் பிரச்சனையாகி விட்டது.

மனிதன் பள்ளிவாசலுக்கு செல்கிறான். ஒரு மணி நேரம் வணக்கம் புரிகிறான். குர்ஆன் ஓதுகிறான், தீனுடைய விஷயங்களை பரிமாறுகிறான். ஆனால் மஸ்ஜிதைவிட்டு அவன் வெளியேறுவதற்கு முன்பாக அவன் பார்வை வெளியேச் சென்றுவிடுகிறது. இவ்வாறு ஒரு மணி நேரத்தின் ஒளி ஒரு தீய பார்வையின் காரணமாக அழிந்து விடுகிறது.

இன்றைய உலக நடைமுறையில் ஆண் சில இடங்களில் அந்நியப் பெண்ணிடம் சேருவதின் பால் தேவையாகிறான். இம்மாதிரி நேரங்களில்

ஆண் என்ன செய்ய வேண்டும்? இது முக்கியமான கேள்வி.

இன்றைய காலத்தில் உலக அளவில் பெரும் சீர்திருத்தப் பணி செய்து வரும் ஹஜ்ரத் பீர் துல்ஃபிகார் அஹ்மது நக்ஷ்பந்தி தாமத் பரகாதுஹும் அவர்களிடம் அடியேன் ஒருமுறை, 'ஹஜ்ரத் ஏர்போர்ட் போன்ற இடங்களில் சில கவுண்டர்களில் பெண்கள் இருக்கிறார்கள். அப்போது என்ன செய்வது? என்று கேட்டேன், ஹஜ்ரத் கூறினார்கள், அப்பெண்ணிற்கு ஏதாவது, உதாரணமாக, டிக்கெட் போன்றவை காண்பிக்க வேண்டியிருந்தால் காண்பியுங்கள். காண்பிப்பது கையின் வேலை, கண்ணுடையதல்ல. இதே போன்று ஏதாவது சொல்ல வேண்டிய கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டால் கேளுங்கள். கேள்வி கேட்பது வாயின் வேலை, கண்ணுடையதல்ல. இவ்விரு நிலைகளிலுமே கண்களை உபயோகப் படுத்த வேண்டிய அவசியமில்லை. அதாவது ஏதாவது பொருள் கொடுக்க வேண்டியிருந்தால் கையால் கொடுங்கள், பார்வையை வேறு பக்கம் வைத்துக் கொள்ளுங்கள். அதே போல் சொல்ல வேண்டிய கேட்க வேண்டிய சூழ்நிலையில் பெண்ணை பார்க்காமல் கேளுங்கள்.

மாஷா அல்லாஹ்! எவ்வளவு அழகான முறை, அற்புதமான யோசனை. இப்போது நாம் தீய பார்வையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வழிகளை யோசிப்பதும் அதன்படி அமல் செய்வதும் அவசியமாக இருக்கிறது.

"Where there is a will, there is a way'

மனிதன் எந்த வேலையை செய்ய நினைக்கிறானோ அதற்கான வழி திறக்கிறது.

இவ்வழிமுறைகளை நமக்கு காட்டித் தந்த ஹஜ்ரத் துல்ஃபிகார் அஹ்மது நக்ஷ்பந்தீ தாமத் பரகாதுஹூம் அவர்களுக்கு வல்ல இறைவன் முழு உம்மத்தின் புறத்திலிருந்து மிகச் சிறந்த நற்கூலியை இம்மையிலும் மறுமையிலும் தந்தருள்வானாக. மேலும் பரிசுத்த இறைவன் அமல் செய்ய தவ்ஃபீக் செய்வானாக!

**ஷகீல் அஹ்மத் நக்ஷ்பந்தி**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## அந்நியப் பெண்களை பார்ப்பதினால் ஏற்படும் விபரீதங்களும், அதை விட்டு தவிர்த்து கொள்ளும் விபரங்களும்.

قُلْ لِلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوْا فُرُوْجَهُمْ

(நபியே!) முஃமிங்களுக்கு : “தம் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தம் வெட்கத் தலங்களைப் பேணிக் கொள்ள வேண்டும்” என்று நீர் கூறுவீராக!

وَقُلْ لِلْمُؤْمِنٰتِ يَغْضُضْنَ مِنْ اَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوْجَهُنَّ

இன்னும் முஃமினான பெண்களுக்கு: (நபியே!) நீர் கூறுவீராக ! “அவர்கள் தம் பார்வையை தாழ்த்திக்கொள்ள வேண்டும்; தம் வெட்கத் தலங்களை பேணிக் கொள்ள வேண்டும்; சூரத்துன் நூர் : 30,31.

மனிதன் மானக்கேடான காரியங்களில் மூழ்கிவிட மூலக் காரணம், அவன் தன்னுடைய பார்வையை கடிவாளமிட்டு கட்டுப்படுத்தாததேயாகும்.

எனவேதான் கெட்ட பார்வையை உம்முல் கபாயிஸ் அதாவது அனைத்து மானக்கேடான பாவங்களின் ஆணிவேராக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

கண்கள், ஃபித்னாக்கள் பொங்கிவரும் ஊற்றுக் கண்களாக இருக்கின்றன. இந்நிலையில் பெண்கள் நிர்வாணமாக சுற்றித் திரிவது அந்த ஃபித்னாவை மெம்மேலும் அதிகப்படுத்தி விடுகிறது.

ஹஜ்ரத் ஷேக் ஜகரிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்; கெட்ட பார்வை மிக மோசமான வியாதியாகும். திக்ரு செய்வதில் ஆர்வம் ஆரம்பத்தில் சிலருக்கு அதிகமாக இருக்கும். ஆனால் இந்த கெட்ட பார்வை அந்த ஆர்வத்தையும் இபாதத்தில் ஏற்படும் இன்பத்தையும் அழித்துவிடுகிறது. பிறகு சிறிது சிறிதாக அவர் நல்ல அமல்கள் செய்வதை முழுமையாக விட்டுவிடுகிறார்.

(ஆப்பீதி, பாகம் :2, பக்கம் : 418)

ஷேக் வாஸிதி (ரஹ்) அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்; அல்லாஹ் ஒரு மனிதனை கேவலப்படுத்த நாடிவிட்டால் அழகிய முகங்களைப் பார்க்கும் பழக்கத்தை அவனுக்கு ஏற்படுத்தி விடுவான்.

சீவி சிங்காரித்து கவர்ச்சியாக வலம் வரும் பெண்களும், அவர்களை இச்சையுடன் பார்க்கும் ஆண்களும் அல்லாஹ்வின் சாபத்திற்குரியவர்களாவர், நெருப்புக் குண்டம் சிறிய தீப்பொறியினால் உருவாகுவதைப் போல் விபரீத குற்றங்கள் கெட்டப்பார்வையின் மூலம் உருவாகின்றன. எனவே வெட்கத் தலங்களை பாதுகாக்க பார்வையை தாழ்த்துவது மிக அவசியமானதாகும்.

நாம் நம்முடைய கண்களுக்கு திரையிடாவிட்டால், நம் உள்ளங்களின் மீது திரை போடப்படும். எச்சரிக்கையாக இருந்துக் கொள்ளுங்கள்.

தீய பார்வையை விட்டு விலகியிருக்க சில வழிமுறைகளை முரீதீன்களுக்கு ஷைகுமாரர்கள் குறிப்பிடுகிறார்கள்.

1. பாதைகளில் செல்லும் போது பார்வையை மிகவும் தாழ்த்திக் கொள்ள வேண்டும். அருகில் செல்பவர்கள் ஆணா, பெண்ணா என்பதை கூட பாதங்களை வைத்து அனுமானித்துக்கொள்ள வேண்டும்.

2. சூப்பர் மார்கெட் மற்றும் டிக்கெட் கவுண்ட் போன்றவற்றில் ஆண்கள் இருக்குமிடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். இதனால் பெண்ணிடம் பேசும் சந்தர்ப்பம் தவிர்க்கப்படுகிறது.

3. அந்நியப் பெண்களிடம் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் சண்டையிட்டுக் கொண்ட இரு நபர்கள் பேசுவதைப் போல் முகத்தை பார்க்காமல் பேசுங்கள்!

4. சாலையில் ஓரங்களில் ஒட்டப்பட்டுள்ள சினிமா போஸ்டர்களை பார்க்காதீர்கள்!

5. வாகனத்தில் செல்லும்போது அருகில் செல்லும் வாகனத்தில் அமர்ந்துள்ள பெண்களின் பக்கம் கவனத்தை

செலுத்தாதீர்கள்.

6. தம் வீடாக இருந்தாலும் அந்நியப் பெண்கள் உள்ளே இருக்கும்போது அவர்கள் தங்களை மறைத்துக்கொள்ளும்படி முன்னெச்சரிக்கை செய்த பின் நுழைய வேண்டும்.

7. அடுத்தவர் வீட்டிற்கு சென்றால் வாசலுக்கு நேராக நிற்கக் கூடாது.

8. ஆண்களும், பெண்களும் கலந்திருக்கும் கூட்டங்களுக்கு அறவே செல்லாதீர்கள் ! பெண்கள் நடமாட்டம் இல்லாத பாதையில் செல்லுங்கள்.

9. சுற்றுலா தலங்களுக்கு செல்லாதீர்கள்! அப்படி செல்வதாக இருந்தால் மற்றவர்கள் செல்லாத நாளை தேர்ந்தெடுத்து அந்நாளில் செல்லுங்கள்!

10. பஸ், ரயில், விமானம் போன்றவற்றில் பிரயாணம் செய்யும் போது மார்க்க நூல்களை எடுத்தச் சென்று அதை படித்தப்படி நேரத்தை கழியுங்கள் !

இல்லையெனில் பிரயாணம் செய்யும் பெண்கள் மீது பார்வைபடும்.

11. பெண்களின் படம் அல்லது டி.வி. பொருத்தப்பட்டுள்ள பஸ், ரயில் நிலையங்களிலும், தங்கும் விடுதிகளிலும், அலுவலகங்களிலும் அந்த திசையில் முதுகை காண்பித்து அமருங்கள்!

12. தேவையின்றி இண்டர்நெட்டை பயன்படுத்தாதீர்கள்!

13. மாற்று மதத்தார் அதிகம் வசிக்கும் பகுதிகளுக்கு சென்றால் யாருடைய முகத்தையும் பார்க்காதீர்கள்! ஏனெனில் கோடை காலங்களில் அவர்கள் தங்கள் மேனிகளில் அதிகமான பகுதிகளை திறந்தே வைக்கின்றனர். குளிர் காலங்களில் ஆடை அணிந்திருந்தாலும் ஆண்கள், பெண்களுக்கு மத்தியில் வித்தியாசம் இல்லாத அளவிற்கு பெண்கள் ஆண்களைப் போன்று முடி வெட்டிக் கொண்டு கோர்ட் அணிந்து டைய் மாட்டிக் கொண்டு வலம் வருகின்றார்கள். இந்த முஸீபத்திலிருந்து தப்பித்து நம்

ஈமானை பாதுகாக்க பார்வையை தாழ்த்துவதைத் தவிர வேறு வழியில்லை.

14. வீட்டில் தனியாக ஒருபோதும் இருக்காதீர்கள்! எந்த வேலையுமின்றி சும்மாவும் இருக்காதீர்கள்!

15. பெண்களின் ஸ்கூல் மற்றும் காலேஜ் இருக்கும் தெருவில் செல்வதை விட்டுவிடுங்கள்!

16. திருமணமாகிவிட்டால் தன் மனைவியை சந்தோஷமாக வைய்யுங்கள்!

17. கஃபாவை தவாஃப் செய்யும் போது பாதங்களை பார்க்கும் வண்ணம் பார்வையை தாழ்த்திக் கொள்ளுங்கள்! கண்டிப்பாக பார்வையை உயர்த்தாதீர்கள்!

18. அந்நியப் பெண்களை பார்ப்பதினால் கிடைக்கும் தண்டனைப் பற்றி அடிக்கடி சிந்தியுங்கள்! அந்நியப் பெண்களை பார்த்தவனின் கண்களில் கண்ணாடியை உருக்கி மலக்குமார்கள் ஊற்றுவார்கள். சூடாக்கப்பட்ட கூர்மையான கம்பிகளை கண்களில் குத்துவார்கள் என்றும் சில கிதாபுகளில் எழுதப்பட்டுள்ளது.

19. அந்நியப் பெண்களை ஒரு முறை பார்த்து விட்டால் இருபது ரகாஅத் தொழுவேன் என்ற தண்டனையை செயல் முறைப் படுத்துங்கள்! இன்ஷா அல்லாஹ் சில தினங்களில் பார்வையை தாழ்த்த ஆரம்பித்து விடுவீர்கள்.

20. ஒவ்வொரு மாதமும் பிறை 13,14,15 ஆகிய தினங்களிலும் திங்கள் மற்றம் வியாழக்கிழகைளிலும் நோன்பு நோற்று வாருங்கள்! இந்த நோன்புகள் நோற்றும், பார்வையை கட்டுப்படுத்த முடியாவிட்டால் ஹஜ்ரத் தாவுத் (அலை) அவர்களைப் போல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைய்யுங்கள்.

21. கீழ்காணும் தஸ்பீஹை காலையிலும் மாலையிலும் 100, 100 முறை ஓதுவதை வழக்கமாக்கி கொள்ளுங்கள்!

لَا مَرْغُوْبِي إِلَّا الله

எனக்கு விருப்பமானவன் அல்லாஹ்தான்.

لَا مَطْلُوْبِي إِلَّا الله

நான் தேடுவது அல்லாஹ்வைதான்.

لا محبوبي إلا الله

எனக்கு பிரியமானவன் அல்லாஹ்தான்.

لا إله إلا الله

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.

22. தினமும் தஹஜ்ஜீத், தொழுகைக்காக எழுந்து அல்லாஹ்விடம், யா அல்லாஹ்! பாவங்களை விட்டு தவிர்ந்திருப்பது எனக்கு சிரமமாக இருக்கிறது. ஆனால் பாவங்களில் ஈடுபடாமல் என்னை பாதுகாப்பது உனக்கு லேசான காரியமாகும். எனவே என் இறைவா! என் உள்ளத்தை தூய்மைபடுத்தி விடுவாயாக! என் பார்வையை பரிசுத்தப்படுத்துவாயாக! என்று துஆ செய்யுங்கள்!

கெட்ட பார்வையை விட்டு விலகியிருப்பதின் வெகுமதி: தம் பார்வையை பாதுகாத்துக் கொள்ளும் மனிதருக்கு மறுமையில் இரு வெகுமதிகள் வழங்கப்படும்.

(1) பார்வையை தாழ்த்திய ஒவ்வொரு முறைக்கும் அல்லாஹ்வை பார்க்கும் பாக்கியம் கிடைக்கும். (2) மறுமையில் அழுவதை விட்டு அந்த கண் பாதுகாக்கப்படும்.

# பழிப்படியாக இறைநேசராக ஆகுவதின் வழிமுறைகள்

ஒவ்வொரு முஸ்லிமுடைய உள்ளத்திலும் தான் அல்லாஹ்றவின் நேசராக ஆக வேண்டும் என்ற ஆசை இருக்கும். அவர் ஏழையாக இருந்தாலும் சரி, பணக்காரராக (செல்வந்தராக) இருந்தாலும் சரி, நல்லவராக இருந்தாலும் சரி, கெட்டவராக இருந்தாலும் சரி, ஆனால் அதிகமானோருக்கு இறைநேசராக ஆவது எப்படி என்பதும் தெரியாது. மேலும் இறைநேசராக ஆக என்ன செய்ய வேண்டுமே என்பதும் தெரியாது. ஆக, எப்படி இறைநேசராக ஆக வேண்டும் என்பது சம்மந்தமான சுருக்கமான சில விஷயங்களை ஹஜ்ரத் அவர்கள் கூறியுள்ளார்கள். அவை:-

1. எப்போதும் ஒளுவுடன் இருக்க வேண்டும். அதன் மூலம் நஃபீல் தொழுகை தொழுகலாம். குர்ஆனை

ஓதலாம். மரணம் வந்தாலும் ஒளுவுடனே மரணிக்கலாம்.

2. அந்தந்த நேரத்திற்குரிய சுன்னத்தான துஆக்களை ஓத வேண்டும்.

3. ஒவ்வொரு நாளும் எல்லா வேலைகளையும் சுன்னத்தின் படி செய்ய வேண்டும். உதாரணமாக, சாப்பிடுவது, தூங்கவது, ஆடை அணிவது, மலஜலம் கழிக்கச் செல்வது, இவை அனைத்தையும் சுன்னத்தை பேணி நிறைவேற்ற வேண்டும்.

4. கடமையான தொழுகைகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டம். தொழுகைக்கு சற்று நேரத்திற்கு முன்பு பள்ளிக்கு சென்று விட வேண்டும். தொழுகைக்குப் பின்பு சற்று நேரம் இருந்து விட்டு திரும்ப வேண்டும்.

5. இஷ்ராக், லுஹா, அவ்வாபீன், தஹஜ்ஜுத் ஆகிய தொழுகைகளை பேணித் தொழ வேண்டும்.

6. குர்ஆன் ஓதுவது, திக்ர் மற்றும் முராகபா செய்வது போன்ற அன்றாட அமல்களை பேணுதலாக செய்வது வரவேண்டும்.

7. அல்லாஹுத ஆலாவின் பிரியத்தை அதிகமாக வெளிப்படுத்தி அவனைப் புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

8. பாங்குச் சப்தம் கேட்டதும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து பதில் சொல்ல வேண்டும்.

9. நடந்த பேச்சுகளிலே அடிக்கடி அல்ஹம் துலில்லாஹ், ஸுப்ஹானல்லாஹ், அல்லாஹு அக்கர் சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

10. வாலிபர்கள் நஃபீலான நோன்புகளை நோற்க வேண்டும். ஒவ்வொரு மாதமும்

பிறை 13,14,15 அல்லது வாரந்தோறும் திங்கள், வியாழன் அன்று நோன்பு நோற்க வேண்டும்.

11. குறைவாக சாப்பிட வேண்டும். வயிறு முட்ட சாப்பிடுவதை விட்டும் தவிர்த்து கொள்ள வேண்டும். குறைவாக சாப்பிடுவதினால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். மற்றும் இச்சைகள் குறையும், அதிகமாக சாப்பிடுவதால் சோம்பேறித்தனம் உண்டாகும்.

12. அந்தந்த நேரங்களில் ஓத வேண்டிய சூராக்களை வழுமையாக ஓத வேண்டும். உதாரணமாக, ஃபஜ்ர் தொழுத பின் சூரா யாசீனையும், லுஹர் தொழுத பின் சூரா ஃபதஹையும், அஸர் தொழுத பின் சூரா நபஃவையும், மஃரிப் தொழுத பின் சூரா வாகிஆவையும். இஷா தொழுத பின் சூரா தபாரக், சூரா அலீஃப் லாம் மீமம் ஸஜ்தா, சூரா துஃகானையும் ஓத வேண்டும்.

13. சந்தோஷமான சமயங்களில் அல்லாஹ்றவுக்கு நன்றி செலுத்த வேண்டும். சோதனை நிறைந்த சமயங்களில் பொறுமையை கையாள வேண்டும்.

14. எவருடைய உள்ளத்தையும் உடைக்க மாட்டேன். நோவினைத் தரமாட்டேன் என்று நமக்கு நாமே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

15. மற்றவர்களின் தவற்றை உடனடியாக உள்ளத்தால மன்னித்து விட வேண்டும்.

16. பார்வையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, மஹ்றம் இல்லாதவர்களிடத்தில் பார்வையை பேண வேண்டும்.

17. திருமணமானவர்கள் இரண்டாவது திருமணம் செய்யும் எண்ணத்திலேயே இருப்பதும் தவறாகும். இதன் காரணமாக ஷைத்தான் தீய பார்வையின் பக்கம் தூண்டுவான்.

18. இன்டர்நெட் மற்றும் செல்ஃபோனை அவசியமின்றி உபயோகிக்கக் கூடாது.

19. நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும் விதியை பொருந்திக் கொள்ள வேண்டும்.

20. பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், பெரியவர்களுக்கும், வீட்டார்களுக்கும் பணிவிடைச் செய்து அவர்களின் துஆவை பெற வேண்டும்.

21. ஹஜ், உம்ரா செய்பவர்களை பிரியமான பார்வை பார்த்து அவர்களிடம் துஆவுக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்.

அல்லாஹு'தஆலா நமக்கு இறை நேசத்தின் ஒளியை தந்தருள்வானாக! மறுமையில் நம்மை தனது இறை நேசர்களுடன் சேர்த்து வைப்பானாக ! ஆமீன்.

தொகுப்பு

# ஹஜ்ரத் மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷ்பந்தி முஜத்திதீ தாமத் பரகாதுஹும்

Publisher :

**Mufti Shakeel Ahmed Naqshbandi**

Jamia Al-Baqiyathus Salihath,

No.33, Anjuman Street, Vellore

Mobile : +91 94444 53232

E-mail : shakeel.naqshbandi@yahoo.com

www.dawat-e-hidayat.org